மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2022
அ.வ.எண்.28/2022

1. அலமேலு
2. வெங்கடாசலம்
3. வேலு
4. முனுசாமி
5. திருமதி. பெருமா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

மாதையன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 10.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மணிகண்ட ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியபிரியா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துகளும், மற்ற சொத்துகளும் கோவிந்தகவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகும். மேற்படி கோவிந்தகவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது மகன்கள் தாசப்பன், பெருமாள் மற்றும் ராமண்ணகவுண்டர் ஆகியோர் உள்ளூர் பஞ்சாயத்தார்கள்

அறிவுரைப்படி வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர். மேற்படி வாய்மொழி பாகபிரிவினைக்கு பின்னிட்டு ராமண்ணகவுண்டர் ச.எண்.159/2A ல் 0.65 செண்ட் நிலமும், ச.எண்.157/2 ல் 0.12 செண்ட் நிலமும் சின்னதாயம்மாளுக்கு கடந்த 04.08.1969 ம் தேதியன்று ஆவண எண்.1593/1969 ன் படி கிரயம் செய்து கொடுத்தார். மேற்படி சொத்தில் சின்னத்தாயம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகன்களான குருநாதன் மற்றும் பெருமாள் ஆகியோர் அனுபவித்து வந்தனர்.

(ii) கடந்த 16.03.1998 ம் தேதியில் 1 முதல் 5 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு குருநாதன் இறந்துவிட்டார். மேலும் 40 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை மனுதாரர்கள் அனுபவித்து வருகின்றனர். எதிர்மனுதாரருக்கு தாவா சொத்திலுள்ள கிணற்றில் நீர் எடுக்கும் உரிமை மட்டுமே உள்ளது. எதிர்மனுதாரரின் பெயர் பட்டா எண்.1015 ல் கூட்டாக பெயர் சேர்க்கப்பட்டு உள்ளது. வில்லங்க சான்றிதழ்படி எதிர்மனுதாரருக்கு ச.எண்.159/2A ல் எந்த சொத்தும் இல்லை. கடந்த 10.02.2022 ம் தேதியில் தாவா சொத்திற்குள் எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்ததால் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரை:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்துகளும், மற்ற சொத்துகளும் எதிர்மனுதாரரின் தாத்தா கோவிந்தகவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பது உண்மை. மேற்படி கோவிந்தகவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது மகன்கள் தாசப்பன், பெருமாள் மற்றும் ராமண்ணகவுண்டர் மூவரும் உள்ளூர் பஞ்சாயத்தார்கள் அறிவுரைப்படி வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர் என்பது பொய். மேற்படி வாய்மொழி பாகபிரிவினைக்கு பின்னிட்டு மேற்படி எதிர்மனுதாரரின் தந்தை ராமண்ணகவுண்டர் ச.எண்.159/2A ல் 0.65 செண்ட் நிலமும், ச.எண்.157/2 ல் 0.12 செண்ட் நிலமும் சின்னதாயம்மாளுக்கு

கடந்த 04.08.1969ம் தேதியன்று ஆவண எண்.1593/1969ன் படி கிரயம் செய்து கொடுத்ததாகவும், மேற்படி சொத்தில் சின்னத்தாயம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகன்களான குருநாதன் மற்றும் பெருமாள் ஆகியோர் அனுபவித்து வந்ததாகவும் கூறுவது தவறு.

(ii) கடந்த 16.03.1998ம் தேதியில் 1 முதல் 5 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு குருநாதன் இறந்துவிட்டார் என்பது உண்மைக்கு புறம்பானதாகும். மேலும் 40 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை மனுதாரர்கள் அனுபவித்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு தாவா சொத்திலுள்ள கிணற்றில் நீர் எடுக்கும் உரிமை உள்ளது என்றும், அதனால் பட்டா எண்.1015ல் கூட்டாக பெயர் சேர்க்கப்பட்டு உள்ளதாகவும், வில்லங்க சான்றிதழ்படி எதிர்மனுதாரருக்கு ச.எண்.159/2A ல் எந்த சொத்தும் இல்லை என்பதும் தவறு. மேலும் கடந்த 10.02.2022ம் தேதியில் தாவா சொத்திற்குள் எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு இடைஞ்சல் செய்ததாக கூறுவது வழக்கிற்காக கூறும் வழக்குமூலமாகும்.

(iii) எதிர்மனுதாரரின் தந்தை ராமண்ணகவுண்டர் சின்னதாயம்மாளுக்கு நிலங்களை விற்கும்போது அளந்து காட்டி விற்கவில்லை. ச.எண்கள்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் மற்றும் 157/2ல் பு.ஏ.0.54 செண்ட் நிலத்தை விட அதிக நிலம் அமைந்துள்ளதை அளந்து பார்க்க மனுதாரர்களிடம் எதிர்மனுதாரர் பலமுறை கேட்டும் அதற்கு சம்மதிக்கவில்லை. எதிர்மனுதாரரின் தந்தை ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை இன்றுவரை தொடர்ந்து அவரது தந்தை காலத்திலிருந்தே ஓட்டி அனுபவித்து வருகிறார். ச.எண்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் நிலத்திற்கு அதிகமான நிலம் எவ்வளவு வந்தாலும் 3ல் ஒரு பாகம் எதிர்மனுதாரருக்கு சேர வேண்டியது. மேலும் ச.எண்.159/2A க்கான பட்டா எண்.1015ன்படி 14 நபர்களின் பெயர் கூட்டாக உள்ள நிலையில், இந்த எதிர்மனுதாரரை மட்டும் தாவாவில் சேர்த்திருப்பதால் தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்கள் பெற்றுவிட்டால் எதிர்மனுதாரர் தாவா சொத்திலுள்ள கிணற்றில் நீரை எடுத்து தன் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்த முடியாமல் போய்விடும். மனுதாரர்கள் தூய்மையான

கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தானது தங்களது பாட்டி சின்னதாயம்மாளுக்கு 04.08.1969 ம் தேதிய கிரய ஆவண எண்.1593/1969 ன் படி பாத்தியப்பட்டு, அவரது இறப்பிற்கு பின் அவரது மகன்களான மனுதாரர்களின் தந்தை குருநாதன் மற்றும் பெருமாள் ஆகியோரால் அனுபவிக்கப்பட்டு வந்து கடந்த 16.03.1998 ம் தேதியில் 1 முதல் 5 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு மேற்படி குருநாதன் இறந்த பின்பு கடந்த 40 ஆண்டுகளாக தாவா சொத்தை மனுதாரர்கள் தான் அனுபவித்து வருகின்றனர் என்றும், மேற்படி எதிர்மனுதாரருக்கு தாவா சொத்திலுள்ள கிணற்றில் நீர் எடுக்கும் உரிமை மட்டுமே உள்ளது என்றும், ச.எண்.159/2A ல் எந்த சொத்தும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதில்லை என்றும், கடந்த 10.02.2022 ம் தேதியில் தாவா சொத்திற்குள் எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்ததால் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சின்னதாயம்மாளுக்கு எதிர்மனுதாரரின் தந்தை ராமண்ணகவுண்டர் தான் தாவா சொத்துகளை விற்பனை செய்தார் என்றும், விற்பனையின் போது தாவா சொத்தை அளந்து காட்டி விற்கவில்லை என்றும், ச.எண்கள்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் மற்றும் 157/2 ல்

பு.ஏ.0.54 செண்ட் நிலத்தை விட அதிக நிலம் அமைந்துள்ளதை அளந்து பார்க்க மனுதாரர்களிடம் எதிர்மனுதாரர் பலமுறை கேட்டும் அதற்கு மனுதாரர்கள் சம்மதிக்கவில்லை என்றும், எதிர்மனுதாரரின் தந்தை ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை இன்றுவரை தொடர்ந்து அவரது தந்தை காலத்திலிருந்தே ஓட்டி அனுபவித்து வருகிறார் என்றும், ச.எண்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் நிலத்திற்கு அதிகமான நிலம் எவ்வளவு வந்தாலும் 3 ல் ஒரு பாகம் எதிர்மனுதாரருக்கு சேர வேண்டியது என்றும், மனுதாரர்கள் கூறுவது போல் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யவில்லை என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் தங்களுடைய சுவாதீனத்தை இடையூறு செய்ததால் வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் பாட்டிக்கு எதிர்மனுதாரரின் தந்தை தாவா சொத்தை விற்பனை செய்த போது தாவா சொத்தை அளந்து காட்டி விற்கவில்லை என்றும், ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை இன்றுவரை தொடர்ந்து எதிர்மனுதாரர் அனுபவித்து வருகிறார் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர்கள் உள்ளார்களா? என்பதும், மேற்படி மனுதாரர்களின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர் இடையூறு செய்தாரா? என்பதும், எதிர்மனுதாரர் கூறுவது போல் ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை எதிர்மனுதாரர் அனுபவித்து வருகிறாரா? என்பதும், தாவா சொத்திற்குரிய பத்திரத்தில் கண்டுள்ள அளவும், மனுதாரர்கள் அனுபவத்தில் உள்ள அளவும் ஒரே அளவுகளா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில்

மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.20 17:24:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :— இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.20 17:24:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.